Click Here to Learn more : https://bit.ly/3wIVBot

# கணிதம் மற்றும் உய்த்துணர்தல் / புரிதிறன்

**கொள்குறி வினாக்கள் விளக்கமான விடைகளுடன்**

**1. ஒரு சரிவகத்தின் பரப்பளவு 400 செ.மீ.$^2$ மற்றும் அதன் இரண்டு இணை பக்கங்கள் முறையே 25 செ.மீ மற்றும் 15 செ.மீ. எனில், சரிவகத்தின் உயரத்தினை காண்க.**

**A)** 10 செ.மீ. **B)** 20 செ.மீ.

**C)** 15 செ.மீ. **D)** 12.5 செ.மீ.

**விளக்கம்:** **விடை: (B)**




சரிவகத்தின் பரப்பளவு $= \frac{1}{2}(a+b) \times h$

கொடுக்கப்பட்டவை, a = 15 செ.மீ.; b = 25 செ.மீ.

பரப்பளவு = 400 செ.மீ.$^2$

மேற்கூறிய சூத்திரத்தில் இருந்து

$\Rightarrow 400 = (15+25) \times h$

$\Rightarrow 400 = \frac{1}{2}(40)\,h \Rightarrow 400 = 20 \times h$

$\Rightarrow h = \frac{400}{20} \Rightarrow h = 20$ செ.மீ.

**2. சக்தி மற்றும் குமார் ஆகியோரின் தற்போதைய வயது விகிதம் முறையே 6 : 5 ஆகும். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களின் வயது விகிதம் 13 : 11 எனில், குமாரின் தற்போதைய வயது என்ன ?**

**A)** 40 ஆண்டுகள் **B)** 42 ஆண்டுகள்

**C)** 35 ஆண்டுகள் **D)** 30 ஆண்டுகள்

**விளக்கம்:** **விடை: (A)**

சக்தி மற்றும் குமாரின் வயதுகள் முறையே $6x$ மற்றும் $x$ என்க. நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களின் வயது விகிதம் முறையே 13 : 11

$\Rightarrow \frac{6x+4}{5x+4} = \frac{13}{11}$

$\Rightarrow 66x + 44 = 65x + 52$

$\Rightarrow 66x - 65x = 52 - 44$

$\Rightarrow x = 8$

எனவே குமாரின் தற்போதைய வயது

$5x = 5 \times 8 = 40$ ஆண்டுகள்

**3. சுருக்குக. $\sqrt{\frac{(469+174)^2 - (469-174)^2}{469 \times 174}} = ?$**

**A)** $\sqrt{2}$ **B)** 2

**C)** 4 **D)** 643

**விளக்கம்:** **விடை: (B)**

கொடுக்கப்பட்ட வினா கீழ்க்கண்ட வடிவில் உள்ளது,

$= \sqrt{\frac{(a+b)^2 - (a-b)^2}{ab}}$

எனவே, $= \sqrt{\frac{4ab}{ab}} = \sqrt{4}$ $\left[\begin{array}{l}\text{இங்கே, } a = 469 \\ b = 174\end{array}\right]$

$\sqrt{4} \Rightarrow 2$

**4. a – b = 3 மற்றும் $a^2 + b^2 = 29$ எனில், ab–இன் மதிப்பினைக் காண்க.**

**A)** 15 **B)** 18

**C)** 10 **D)** 12

**விளக்கம்:** **விடை: (C)**

$(a - b)^2 = a^2 + b^2 - 2ab$

$\Rightarrow (3)^2 = 29 - 2ab$

$\Rightarrow 9 = 29 - 2ab$

$\Rightarrow 2ab = 29 - 9 \Rightarrow 2ab = 20$

$\Rightarrow ab = \frac{20}{2} \Rightarrow ab = 10$

**5. ஒருவர் சில கோழிகள் மற்றும் ஆடுகள் வைத்துள்ளார். அவற்றில் முறையே தலை மற்றும் கால்களின் எண்ணிக்கை 64, 204 இருக்கின்றது எனில், ஆடுகளின் எண்ணிக்கை யாது ?**

**A)** 22 **B)** 26

**C)** 38 **D)** 40



Click Here to Learn more : https://bit.ly/3wIVBot

Click Here to Learn more : https://bit.ly/3wIVBot



**விளக்கம்:** **விடை: (C)**

கோழியின் எண்ணிக்கையை $x$ என்க.

ஆடுகளின் எண்ணிக்கையை ல என்க.

$x+y \;=\; 64$ .....................(1)

$2x + 4y = 204$ .....................(2)

$(2) \div 2 \Rightarrow\; x+2y = 102$ .....(3)

(1)–இல் (2)–ஐ கழிக்க

$$\begin{aligned} x + \;\; y &= \;64 \\ x + 2y &= \;102 \\ (-)\;\;(-)\;\;\; &\;\;(-) \\ \hline -y &= -38 \quad \Rightarrow y = 38 \end{aligned}$$

$y$ –இன் மதிப்பை (1) –இல் பிரதியிடவும்.

$\Rightarrow x + 38 = 64$

$\Rightarrow x = 64 - 38 \quad \Rightarrow x = 26$

$\Rightarrow$ ஆடுகளின் எண்ணிக்கை = 38

கோழிகளின் எண்ணிக்கை = 26

**6. ஒரு நீர் தேக்கத்தொட்டியை A, B மற்றும் C ஆகிய குழாய்கள் முறையே 10, 13, 18 மணி நேரத்தில் நிரப்புகின்றன. A–என்ற குழாய் தொடர்ந்தும், முறையே B மற்றும் C ஆகிய குழாய்கள் ஒரு மணிநேர இடைவெளியில் மாற்றி மாற்றி திறக்கப்படுகின்றன எனில், தொட்டி நிரம்ப எடுத்துக்கொள்ளும் நேரம் யாது ?**

**A)** 7 மணி நேரம் **B)** $7\frac{1}{2}$ மணி நேரம்

**C)** $6\frac{2}{3}$ மணி நேரம் **D)** 6 மணி நேரம்

**விளக்கம்:** **விடை: (D)**

(A+B)–இன் ஒரு மணி நேர

வேலை = $\left(\frac{1}{10}+\frac{1}{13}\right)\ \frac{23}{130}$

(A+C)–இன் ஒரு மணி நேர வேலை

$= \left(\frac{1}{10}+\frac{1}{18}\right)\ \frac{28}{180} = \frac{7}{45}$

இரண்டு மணி நேரத்தில் நிரம்பக்கூடிய பகுதி

$= \frac{23}{130}+\frac{7}{45} = \frac{207+182}{1170} = \frac{389}{1170} = \frac{1}{3}$

6 மணி நேரத்தில் நிரம்பக் கூடிய பகுதி

$= \frac{1}{3}\ \ 3 = 1$

மீதமுள்ள பகுதி $= 1-1 = 0$

$\therefore$ நீர்த்தேக்க தொட்டியின் முழுப் பகுதியும் நிரம்ப எடுத்து கொள்ளும் காலம் = 6 மணிநேரம்

**7. ₹ 1100/- P, Q, R ஆகிய மூவரிடையே P–க்கு Q–வை போன்று நான்கு மடங்காகவும் Q–க்கு R–யை போன்று இரண்டு மடங்காகவும் முறையே பிரித்துக்கொடுத்தால் அவர்கள் பெறும் தொகை எவ்வளவு ?**

**A)** ₹ 700, ₹ 440, ₹ 140

**B)** ₹ 700, ₹ 600, ₹ 500

**C)** ₹ 800, ₹ 200, ₹ 100

**D)** ₹ 880, ₹ 440, ₹ 220

**விளக்கம்:** **விடை: (C)**

R என்பவர் பெறும் தொகை $x$ என்க.

Q என்பவர் பெறும் தொகை $2x$ என்க.

P என்பவர் பெறும் தொகை $8x$ என்க.

$\Rightarrow 8x + 2x + x = 1100$

$\Rightarrow 11x = 1100$

$\Rightarrow x = \frac{1100}{11} \quad \Rightarrow x = 100$

P – பெறும் தொகை = $8x = 8 \times 100 =$ ₹ 800

Q – பெறும் தொகை = $2x = 2 \times 100 =$ ₹ 200

R – பெறும் தொகை $= x = x\ 100 =$ ₹ 100

**8. கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தில் எத்தனை முக்கோணங்கள் உள்ளது என்பதை கண்டறிக.**



**A)** 11 **B)** 17

**C)** 13 **D)** 15

**விளக்கம்:** **விடை: (D)**






Click Here to Learn more : https://bit.ly/3wIVBot

Click Here to Learn more : https://bit.ly/3wIVBot



**(i) எளிய முக்கோணங்களின் எண்ணிக்கை**

(1) AFB (2) AFC (3) FEC (4) FEB
(5) CED (6) BED

**(ii) இரண்டு கூறுகளினால் ஆன முக்கோணங்கள்**

(1) ABC (2) ACE (3) ABE (4) BCE
(5) BFD (6) FCD

**(iii) மூன்று கூறுகளினால் ஆன முக்கோணங்கள்**

(1) ACD (2) ABD

**(iv) நான்கு கூறுகளினால் உருவாக்கப்பட்டுள்ள பெரிய முக்கோணங்களின் எண்ணிக்கை**

(1) BCD
மொத்தம் = 6+6+2+1
= 15 முக்கோணங்கள்

**9. தொடர்ச்சியான மூன்று ஒற்றை படை எண்களில் முதல் எண்ணின் மூன்று மடங்கு மூன்றாவது எண்ணின் இரண்டு மடங்கிற்கு மூன்று கூடுதலாக உள்ளது எனில், அந்த மூன்றாவது எண் என்ன ?**

**A)** 15 **B)** 9
**C)** 13 **D)** 11

**விளக்கம்:** **விடை: (A)**

மூன்று ஒற்றைப்படை எண்களை $x$, $x + 2$ மற்றும் $x + 4$ என்க.

கொடுக்கப்பட்ட விதிப்படி, $\Rightarrow 3x = 2(x + 4) + 3$

$\Rightarrow 3x = 2x + 8 + 3 \Rightarrow 3x = 2x + 11$

$\Rightarrow 3x - 2x = 11 \Rightarrow x = 11$

∴ முதல் ஒற்றைப்படை எண் = 11

இரண்டாவது ஒற்றைப்படை எண்

$= x + 2 = 11 + 2 = 13$

மூன்றாவது ஒற்றைப்படை எண்

$= x + 4 = 11 + 4 = 15$

**10. கேள்விக்குறியிடப்பட்ட இடத்தில் வரும் எண்ணை கண்டறிக.**




**A)** 11 **B)** 9
**C)** 13 **D)** 32

**விளக்கம்:** **விடை: (B)**

7 + 9 = 16 – 4 = 12
4 + 1 = 5 – 1 = 4
6 + 5 = 11 – 2 = 9

**11. பின்வரும் படத்தில் எத்தனை சதுரங்கள் அமைந்துள்ளன ?**



**A)** 10 **B)** 15
**C)** 8 **D)** 9

**விளக்கம்:** **விடை: (A)**




ABCD, EFGH, AEIH, EIFB, HIGD, GIFC, HMIL, MEJI, IJFK, IKGL= 10 சதுரங்கள்

**12. வினாக் குறியிட்ட இடத்தில் அமைய வேண்டிய எண் எது ?**




**A)** 63 **B)** 73
**C)** 53 **D)** 83

**விளக்கம்:** **விடை: (A)**

25+19+18 = 62 – 10 = 52

13 + 32 +14 = 59 – 10 = 49

இதேபோல், 16 + 17 +40 = 73 – 10 = 63



Click Here to Learn more : https://bit.ly/3wIVBot

www.surabooks.com

Click Here to Learn more : https://bit.ly/3wIVBot



**13. விடுபட்ட எழுத்தைக் கண்டுபிடி.**




**A)** R **B)** S

**C)** T **D)** W

**விளக்கம்:** **விடை: (C)**

$A \xrightarrow{+5} F$

$F \xrightarrow{+5} K$

$K \xrightarrow{+5} P \xrightarrow{+5} U \xrightarrow{+5} Z$

$E \xrightarrow{+5} J \xrightarrow{+5} O \xrightarrow{+5} \boxed{T}$

**14. A, K, L, R மற்றும் U என்ற ஐவர் ஒரு வட்டமேஜையின் மையத்தை நோக்கி அமர்ந்துள்ளனர். U–க்கு இடப்பக்கத்தில் K அமர்ந்துள்ளார். A–க்கும் U–க்கும் இடையில் R அமர்ந்துள்ளார். L–க்கு இருபுறமும் அமர்ந்திருப்பவர்கள்,**

**A)** K மற்றும் A **B)** U மற்றும் A

**C)** K மற்றும் R **D)** A மற்றும் R

**விளக்கம்:** **விடை: (A)**




**15. I) ரமா என்பவர் ராணியை விட அதிக மதிப்பெண் பெற்றார்.**

**II) ராணி என்பவர் ரத்னாவை விட குறைவான மதிப்பெண் பெற்றார்.**

**III) ரத்னா என்பவர் ரமாவை விட அதிக மதிப்பெண் பெற்றார்.**

**IV) ரம்யா என்பவர் ரமாவை விட அதிகமாகவும் ரத்னாவை விட குறைவாகவும் மதிப்பெண் பெற்றார் எனில், இங்கு அதிக மதிப்பெண் பெற்றவர் யார் ?**

**சரியான விடையளி :**

**A)** ரமா **B)** ராணி

**C)** ரத்னா **D)** ரம்யா

**விளக்கம்:** **விடை: (C)**

**தரவுகள்**

ரமா > ராணி ; ராணி < ரத்னா

ரத்னா > ரமா ; ரத்னா > ரம்யா > ரமா

**முடிவு**

ரத்னா > ரம்யா > ரமா > ராணி

**16. A என்பவர் ஓரிடத்திலிருந்து ஒரு திசையை நோக்கி 1 கி.மீ. நடந்த பிறகு இடப்பக்கம் திரும்பி 1/2 கி.மீ நடந்து மீண்டும் இடப்பக்கம் திரும்பி நடந்து செல்கிறார். தற்போது அவர் கிழக்குத் திசை நோக்கி நடந்து சென்றால், தொடக்கத்தில் அவர் எந்த திசையை நோக்கி நடக்கத் தொடங்கினார் ?**

**A)** மேற்கு **B)** கிழக்கு

**C)** தெற்கு **D)** வடக்கு

**விளக்கம்:** **விடை: (A)**




தொடக்கத்தில் அவர் மேற்குத் திசையை நோக்கி நடக்கத் தொடங்கியிருக்கிறார்.

**17. 'LABOUR' என்ற சொல் 'KBAPTS' எனக் குறியீட்டு மொழியில் எழுதப்பட்டால், 'CANDID' என்ற சொல் எவ்வாறு எழுதப்படும் ?**

**A)** D B O E J E **B)** B B M C H C

**C)** D Z O C J C **D)** B B M E H E

**விளக்கம்:** **விடை: (D)**






Click Here to Learn more : https://bit.ly/3wIVBot